தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-4-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மே மற்றும் ஜுன் மாதங்களில் நிலையான விலையில் கத்திரி

கத்திரியில் நீர் மற்றும் பொட்டாசியம் அதிகமாக உள்ளது. இது பல மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. குறிப்பாக புற்றுநோய், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. பாரம்பரிய சீன மருத்துவத்தில் குடல் இரத்தப்போக்கை நிறுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இதன் பழம் காளான் நச்சிற்கு ஒரு மாற்று மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவிலிருந்து உலகம் முழுவதும் 30க்கும் மேற்ப்பட்ட நாடுகளுக்கு கத்திரி புதிய மற்றும் குளிர்விக்கப்பட்ட கத்திரிக்காயாகவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி சந்தையாக நெதர்லாந்து உள்ளது. அதனைத் தொடர்ந்து கனடா, பஹ்ரைன், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கிய அரபு நாடுகள் ஆகியன உள்ளன. உள்நாட்டில் இப்பயிர் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கத்திரி பரவலாகப் பயிரிடப்படுகிறது. இவற்றுள் சேலம் மாவட்டம் 12 சதவீத பங்களிப்புடன் முதன்மையாக உள்ளது. பொதுவாக கத்திரி குளிர்காலம் மற்றும் கோடைக்காலங்களில் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர் சந்தைக்கு தொண்டாமுத்தூர், ஆலந்துறை, கந்தே கவுண்டன் சாவடி மற்றும் சூலூர் பகுதிகளில் இருந்து மிதமான வரத்து உள்ளது. நடுத்தரத் தேவை மற்றும் மிதமான வரத்து நிலையான விலைக்கு காரணமாக உள்ளது. கோயம்புத்தூர் மொத்த சந்தையில் தற்போது வரிக் கத்திரிக்காய் கிலோ 9 -12 ரூபாய் என்ற விலை விவசாயிகளுக்குக் கிடைக்கிறது.

தற்போது தலைவாசல் மொத்த சந்தைக்கு ஆத்தூரார், கடலூர் மற்றும் பண்ருட்டி ஆகிய பகுதிகளில் இருந்து குறைவான அளவில் வரிக் கத்திரிக்காயின் வரத்து உள்ளது. தற்போது

கிலோவிற்கு 9 - 10 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையிலும் வரும் வாரங்களில் வரத்து குறைவாகக் காணப்படும். தற்போது வரிக் கத்திரிக்காய் கிலோவிற்கு 10 ரூபாய் என்ற பண்ணை விலையில் விற்பனை ஆகிறது.

எதிர்வரும் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் நிலவிய கத்திரி விலை விபரங்களை ஆராய்ந்தது.

ஆய்வு முடிவுகளின் படி ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கத்தரியின் பண்ணை விலையானது கிலோவிற்கு 10 முதல் 12 ரூபாய் வரை கோயம்புத்தூர் மற்றும் தலைவாசல் மொத்த சந்தையில் இருக்கும். மேலும் ஜூன் மாதத்தில் கோயம்புத்தூர் மற்றும் தலைவாசல் மொத்த சந்தையில் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் விலை உயர வாய்ப்பு உள்ளது. ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் தற்போதைய விலையான கிலோவிற்கு 10 ரூபாய் என்ற அளவில் ஏப்ரல் இறுதி வரை இருக்கும். மே மற்றும் ஜூன் மாதங்களில் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் வரை குறைந்து காணப்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611374 / 6611283.

மக்கள் தொடர்பு அலுவலர்